Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 251

செவ்வாய்க்கிழமை
05 ஓகஸ்ட் 2025

ஆடி 20 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## இந்திய மீனவர்கள் நான்கு பேர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 5
யாழ்ப்பாணம் நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இந்திய மீனவர் 11

மாகாணசபைகளுக்கு

## அதிகாரங்களை வழங்காமல் விமர்சிப்பதை ஏற்கமுடியாது

### நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 5
மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்வதாயின் முழுமையாக, முறையாகப் பகிரவேண்டும். அதிகாரங்களை முறையாகப் பகிராமல் மாகாண சபை முறைமை தோல்வியடைந்துள்ளது எனக் கூறுவதை ஏற்கமுடியாது- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். 11

## செம்மணிப் புதைகுழியில் மேலும் 5 என்புத்தொகுதிகள்

யாழ்ப்பாணம், ஓக. 5
அரியாலை செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று இடம்பெற்ற அகழ்வுப் பணிகளின்போது, மேலும் ஐந்து என்புத்தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான இரண்டாம் கட்ட அகழ்வின் 30ஆம் நாள் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. 11

## செம்மணியில் நேற்று ஜி.பி.ஆர். ஸ்கானிங்!

### இன்றும் பணிகள் தொடரும்



யாழ்ப்பாணம், ஓக. 5
சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தரையை ஊடுருவும் ராடர் அமைப்பின் மூலம் ஸ்கான் செய்யும் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.
சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மேலதிகமாக புதைகுழிகள் 11

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு ஸ்ரீலங்கா அரசைக் கொண்டுசெல்க!

## மனித உரிமைகள் பேரவைக்கு தமிழ்த் தரப்புகள் கடிதம்

**யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 5**

**இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பரிந்துரைக்கும் செயன்முறை ஆரம்பிக்கப்பட வேண்டும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் எதிர்வரும் அறிக்கையில் இந்த உள்ளடக்கம் இடம்பெற வேண்டும் இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ்த் தரப்புகள் வலியுறுத்தியுள்ளன.** 11

## செம்மணி சான்றுப்பொருள்கள் இன்று மக்களின் பார்வைக்கு!

யாழ்ப்பாணம், ஓக. 5
யாழ்ப்பாணம் - செம்மணிப் புதைகுழியில் இருந்து இதுவரை மீட்கப்பட்ட சான்றுப்பொருள்கள் இன்று மக்களின் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப் படவுள்ளன. 12



## செம்மணிப் புதைகுழிக்கு நேற்று ம.உ.ஆணைக்குழுவினர் பயணம்

யாழ்ப்பாணம், ஓக. 5
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உயர்மட்ட அதிகாரிகள், செம்மணி மனிதப் புதைகுழிக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டதுடன், அங்குள்ள நிலைமைகளை அவதானித்தனர். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர்களான கலாநிதி கெஹான் தினுக் குணதிலக, பேராசிரியர் தையமுத்து தனராஜ், பேராசிரியர் பாத்திமா பர்சானா ஹனிபா, மற்றும் யாழ்.பிராந்திய அலுவலகத்தின் இணைப்பாளர் தங்கவேல் கனகராஜ் உட்பட எண்மர் அடங்கிய குழு 12

## ரணிலின் செயலாளர் சி.ஐ.டி.யில்

விரிவு பக்கம்:- 05

## மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பிய கடிதத்தில் குளறுபடி

### பொது அமைப்புகளின் பெயர்கள் அனுமதி இல்லாமல் பயன்பாடு

யாழ்ப்பாணம், ஓக. 5
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு, வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ்த் தரப்புகளின் பெயரால் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் தமது பெயர்கள் 11



### முச்சந்தி முரளி

‘பேர்மிசன் இல்லாமல் பேர் போட்ட விசயம், முக்கி முக்கித் தைச்ச வலையில முக்கால்வாசி ஓட்டையாம் எண்ட கதையாவெல்லோ கிடக்கு’

## மஹிந்தவின் பாதுகாப்பு குறைக்கப்பட வேண்டும்

வவுனியா, ஓக. 5
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு வழங்கப்பட்டிருக்கும் 60 பேர் கொண்ட பாதுகாப்பு ஏற்பாடானது மிக அதிகம். அவரின் பாதுகாப்புப் படையணியை 30 பேரைக் கொண்டதாகக் குறைக்கவேண்டும் என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா வலியுறுத்தியுள்ளார்.
அவர் மேலும் தெரி 11



மன்னாரில்

## காற்றாலை உபகரணங்களை ஏற்றிவந்த வாகனங்களை இடைமறித்துப் போராட்டம்

மன்னார், ஓக. 5
மன்னாரில் காற்றாலைக் கோபுரங்கள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கான உபகரணங்களை ஏற்றிக்கொண்டுவந்த கனரக வாகனங்களை இடைமறித்து நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மன்னாரில் காற்றாலைகள் அமைப்பதற்கு நீண்டகாலமாக முயற்சிகள் இடம் 11

வவுனியாவில்

## நகைகள் திருட்டு; சந்தேகநபர் கைது

### 25 பவுண் நகைகள் மீட்பு

வவுனியா, ஓக. 5
வவுனியா - சோயா வீதியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற நகைத் திருட்டுடன் தொடர்புடைய சந்தேகநபர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
வவுனியா - சோயா வீதியில் உள்ள வீடொன்றில் 12

## புலம்பெயர் புலிகளால் மஹிந்தவுக்கு ஆபத்து

### பூச்சாண்டி காட்டுகிறார் சாகர

கொழும்பு, ஓக. 5
புலம்பெயர் புலிகளால் மஹிந்த ராஜபக்ச இலக்குவைக்கப்பட்டுள்ளார். அவர்களின் வேண்டுகோளுக்கு அமையவே மஹிந்தவின் பாதுகாப்பு ஏற்பாடு 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|---|
| திகதி: 04.08.2025 | திகதி: 04.08.2025 | திகதி: 04.08.2025 | திகதி: 04.08.2025 | திகதி: 04.08.2025 | திகதி: 04.08.2025 | திகதி: 04.08.2025 | திகதி: 04.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம்: 4153 | சீட்டிழுப்பு இலக்கம்: 1220 | சீட்டிழுப்பு இலக்கம்: 0179 | சீட்டிழுப்பு இலக்கம்: 2259 | சீட்டிழுப்பு இலக்கம்: 5911 | சீட்டிழுப்பு இலக்கம்: 1941 | சீட்டிழுப்பு இலக்கம்: 0486 | சீட்டிழுப்பு இலக்கம்: 0027 |
| ஆங்கில எழுத்து: I | வெற்றி இலக்கினம்: கும்பம் | ஆங்கில எழுத்து: W | ஆங்கில எழுத்து: K | ஆங்கில எழுத்து: H | ஆங்கில எழுத்து: X | ஆங்கில எழுத்து: S | வெற்றி இலக்கினம்: மேஷம் |
| | | | சுப்பர் இலக்கம்: 01 | | | | |
| வெற்றி இலக்கங்கள்: 24 29 71 80 | வெற்றி இலக்கங்கள்: 15 25 42 58 | வெற்றி இலக்கங்கள்: 3 7 4 8 | வெற்றி இலக்கங்கள்: 32 43 52 57 | வெற்றி இலக்கங்கள்: 0 9 2 6 7 8 | வெற்றி இலக்கங்கள்: 37 75 76 81 | வெற்றி இலக்கங்கள்: 2 6 7 8 | வெற்றி இலக்கங்கள்: 16 19 25 46 |
| விசேட எழுத்து: I | | | | | விசேட எழுத்து: X | | |

# ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கும் அரசியல்வாதிகள்!

## 6 மாதங்களில் 29 பேர் கைது

கொழும்பு, ஓக.5

இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு கடந்த ஆறு மாதங்களில் முன்னாள் அமைச்சர், அவரது மனைவி, பிள்ளைகள் மற்றும் நெருங்கிய உறவினர்கள் உட்பட 29 பேரைக் கைதுசெய்துள்ளது.

இலஞ்சம், சட்டவிரோத சொத்துக் குவிப்பு மற்றும் அதிகாரத் துஷ்பிரயோகம் ஆகிய குற்றச்சாட்டுகளில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, கைதுசெய்யப்பட்டவர்களைத்தவிர நாடு முழுவதும் உயர்நீதிமன்றங்களில் 50 வழக்குகள் ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 04.08.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| வெற்றி வாரம் | 0619 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கம் | 8 6 1 9 7 4 |

| Super Ball (DLB) | |
|---|---|
| திகதி | 04.08.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2885 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கம் | 07 08 58 80 |

| சனிதா (DLB) | |
|---|---|
| திகதி | 04.08.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கம் | 01 14 72 79 |
| வெற்றி வாரம் | 5046 |

| லக்ன ராசி (DLB) | |
|---|---|
| திகதி | 04.08.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| ராசி | தனுசு |
| வெற்றி இலக்கம் | 31 47 48 51 |
| சீட்டிழுப்பு வாரம் | 4597 |

| KAPRUKA (DLB) | |
|---|---|
| திகதி | 04.08.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | R |
| சுப்பர் இலக்கம் | 13 |
| வெற்றி இலக்கம் | 05 29 32 43 |
| வெற்றி வாரம் | 2061 |

| அத கோடிபதி (DLB) | |
|---|---|
| திகதி | 04.08.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கம் | 16 17 31 53 |
| வெற்றி வாரம் | 2711 |

| JAYODA (DLB) | |
|---|---|
| திகதி | 04.08.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கம் | 21 49 57 64 |
| வெற்றி வாரம் | 2149 |

## தரமற்ற தடுப்பூசி இறக்குமதி பிணைகோரும் சந்தேகநபர்!

கொழும்பு, ஓக.5

தரமற்ற நோயெதிர்ப்புத் தடுப்பூசிகள் இறக்குமதி செய்யப்பட்டமை தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இறக்குமதி செய்த நிறுவனத்தின் உரிமையாளர் சுகத் ஜானக பெர்னாண்டோ தாக்கல் செய்துள்ள பிணை மனுக்கோரிக்கை தொடர்பான உத்தரவு எதிர்வரும் 7ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று அறிவித்தது.

இந்தப் பிணைமனு மீதான உத்தரவை நேற்று அறிவிக்கத்திட்டமிட்டிருந்தபோதும், இந்த உத்தரவு எதிர்வரும் 7ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி இந்திரிகா காலிங்கவங்ச அறிவித்தார்.

தரமற்ற நோயெதிர்ப்புத் தடுப்பூசிகள் இறக்குமதி செய்யப்பட்டன என்று கூறப்படும் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட தரப்பினருக்கு எதிராக மூவரடங்கிய மேல் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் தடுப்பூசிகளை இறக்குமதி செய்த நிறுவனத்தின் உரிமையாளர் சுகத் ஜனக பெர்னாண்டோ முதல் சந்தேகநபராகப் பெயரிடப்பட்டுள்ளார். (ஏ-இ)

## யோஷித்த, டெய்சி வழக்கு ஒக்ரோபரில்

கொழும்பு, ஓக.5

பணமோசடி தடுப்புச் சட்டத்தின்கீழ் யோஷித்த ராஜபக்ச மற்றும் அவரது பாட்டியான டெய்சி பொரெஸ்ட் ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 29ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. யோஷித்த ராஜபக்சவும், டெய்சி பொரெஸ்ட்டும் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர். வழக்கை விசாரணை செய்யும் கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி பிரதீப் அபேரத்ன விடுமுறையில் உள்ளதால் வழக்குமீதான விசாரணையை நீதிமன்றம் ஒத்திவைத்தது.

2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் திகதி முதல் 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 12ஆம் திகதிக்கு உட்பட்ட காலப்பகுதியில், சட்டவிரோதமாக சம்பாதித்ததாக கூறப்படும் 59 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துகளை 3 வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்தனர் என்று யோஷித்த ராஜபக்ச மற்றும் அவரது பாட்டியான டெய்சி பொரெஸ்ட் ஆகியோருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஏ-இ)




## அதிகரிக்கும் தடுப்புக்காவல் மரணம் அதிகாரியை நியமிக்க அறிவுறுத்தல்

கொழும்பு, ஓக.5

பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்படும்போது உயிரிழப்போர் தொடர்பான நடவடிக்கைகளை மேற்பார்வையிட ஓர் அதிகாரி நியமிக்கப்படவேண்டும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது. பதில் பொலிஸ்மா அதிபருக்கு இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அதுதொடர்பான அறிக்கையை எதிர்வரும் 28திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

அதேவேளை, போதைப்பொருள் தடுப்புப் பணியகத்தின் காவலில் இருந்தபோது மரணமான இலங்கை தொழிற்பயிற்சி ஆணைக்குழுவின் முகாமைத்துவ உதவியாளர் சமந்தா பிரீத்தி குமாரவின் குடும்பத்துக்கு ஒன்பது பொலிஸ் அதிகாரிகள் 2.5 மில்லியன் ரூபாயை இழப்பீடு வழங்கவேண்டும் என்று ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது. இறந்தவரின் மனைவி டி.பி.தில்ருக்ஷி என்பவர் தாக்கல்செய்த மனுவின் அடிப்படையில், மனித உரிமைகள் ஆணையகம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. முன்னதாக அண்மைய மாதங்களில் தொடர்ச்சியான பொலிஸ் நிலைய மரணங்கள் ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து பொலிஸ் நிலைய மரணங்களைத் தடுப்பது தொடர்பாகக் கடந்த மே மாதம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 119 வழிகாட்டுதல்களைப் பொலிஸ்மா அதிபருக்கு வழங்கியது. (ஏ-இ)

## சொத்து, பொறுப்பு விவரங்கள் வழங்காவிட்டால் நடவடிக்கை

### இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு எச்சரிக்கை


கொழும்பு, ஓக.5

எதிர்வரும் 31ஆம் திகதிக்குள் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்கத் தவறும் அரச அதிகாரிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு அறிவித்துள்ளது. 2023ஆம் ஆண்டு 9ஆம் எண் ஊழல் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 90இன் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

மார்ச் மாதம் 31ஆம் திகதியிட்ட தங்கள் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான அறிவிப்புகளைச் சமர்ப்பிக்கவேண்டிய அதிகாரிகள் ஜூன் மாதம் 30ஆம் திகதிக்குள் அவற்றை இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவுக்கு அனுப்புவதற்காக அந்தந்த நிறுவனத் தலைவர்களிடம் ஒப்படைக்கவேண்டும். ஜூன் மாதம் 30ஆம் திகதி முதல் ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதிவரை தாமதமாக சமர்ப்பிக்கப்படும் அறிவிப்புகளுக்கு சட்டத்தின் விதிகளின்படி அபராதம் விதிக்கப்படும் என்று ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜூன் மாதம் 30ஆம் திகதிக்குப் பின்னரும் சமர்ப்பிக்கப்படும் அறிவிப்புகளை நிறுவனத் தலைவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும், எந்தவொரு அதிகாரப்பூர்வ அறிவிப்பும் ஒரு நிறுவனத் தலைவரால் நிராகரிக்கப்பட்டால், உடனடியாக ஆணைக்குழுவுக்கு அறிவிக்கவேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(எட்டாம் திருவிழா)






நல்லூர்க் கந்தசுவாமி ஆலய விசுவாவசு வருட மஹோற்சத் திருவிழாவின் ஆறாம் நாள் மாலை உற்சவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை பக்திபூர்வமாக நடைபெற்றது.

ஆட்டுக் கடா வாகனத்தில் நல்லூர்க் கந்தவேற்பெருமான் வள்ளி தெய்வயானை நாயகியருடன் திருவீதி உலா வந்தார். (எ-66)

# தெய்வீகத் திருக்கூட்ட தொடரின் 8ஆம் நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக 5

நல்லூர்ப் பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடரின் எட்டாம் நாள் நிகழ்வு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும்.

தெல்லிப்பழைப் பிரதேச செயலகப் பிரிவின் சைவ வாலிபர் சங்க அறநெறிப் பாடசாலை, தவளக்கிரி முத்துமாரியம்மன் அறநெறிப் பாடசாலை, பன்னாலை கணேசா அறநெறிப் பாடசாலை, வித்தகபுரம் விழிசிட்டி ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை மற்றும் அழகொல்லை விநாயகர் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றில் கல்விபயிலும் மாணவர்கள் கலைநிகழ்வுகளை வழங்கவுள்ளனர். கொக்குவில் விஜயலக்சுமி கலைக் கல்லூரியைச் சேர்ந்த நிரஞ்சலா சுந்தரலிங்கம், ஆரபி பிரதீபன் ஆகியோரின் வயலின் இசை நிகழ்வும், யாழ். இந்தியத் துணைத் தூதரக யோகா வளவாளர் சி. உமாசுதனின் யோக அசைவுகள் நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

(எ-25)



நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கும் தெய்வீகத் திருக்கூட்ட நிகழ்வின் 6 ஆம் நாள் நிகழ்வு, நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது. திருக்கயிலாய பரம்பரை ஸ்ரீ கந்தப்பரம்பரை சூரியனார் கோயில் ஆதீன ஸ்ரீ கார்யம் அருட்குருநாதர் தவத்திரு ஸ்ரீமத் சிவாக்கர தேசிய சுவாமிகள் அருளுரை வழங்கினார். (எ-25)

# ஆன்மிக அருளுரை

யாழ்ப்பாணம், ஓக.5

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய பெருந் திருவிழாக் காலத்தில் சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டு வரும் ஆன்மிக அருளுரை இன்று செவ்வாய்க்கிழமை ஏழாவது நாளாக நடைபெறவுள்ளது. இன்று இரவு 8 மணி முதல் இரவு 8.30 மணி வரை நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீன மண்டபத்தில் இடம்பெறும் நிகழ்வில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு. வேலன் சுவாமிகள் கலந்துகொண்டு "எப்போது அருள்வாய்?" எனும் தலைப்பில் ஆன்மிக அருளுரை ஆற்றுவார். (எ-66)

# நல்லூரில் தெய்வீகக் கலை அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஓக.5


நல்லூர்க் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், "தெய்வீகக் கலை அர்ச்சனை" நிகழ்வு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினமும் காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை கந்தரோடை ஓம் ஸ்ரீ நாக பூசணி அம்மன் பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வும், ஆன்மிகப்பிரசாரகர் திருமதி சிவயோகவதனி யோகீஸ்வரனின் ஆன்மிகவுரையும் இடம்பெறவுள்ளன. (எ-25)



மட்டுவில் மருதடி தான்தோன்றி பிள்ளையார் கோவில் பெருந்திருவிழாவின் மாம்பழத் திருவிழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

பிள்ளையாருக்குப் படைக்கப்பட்ட மாம்பழங்கள் 5 இலட்சத்து 22 ஆயிரத்து 800 ரூபாவுக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டுள்ளன. (எ-25,9)





## நல்லூரான் சிறப்பம்சம்

# நல்லூர்ப் பதிவாழ் நல்லை வாசனே

புள்ளி மயில் வாகனனே புவனம் எல்லாம் காப்பவனே
வள்ளி குறமகள் மணாளனே மாதுமை பாலகனே
ஆசையுடன் அள்ளி அணைத்த கார்த்திகைப் பெண்
களின் கார்த்திகை மைந்தனே

உள்ளொளி பெருக்கி அக இருள் அகற்றி–உலகில்
அருளொளி வீசி இப்புவி வாழ் மாந்தர் தம்
வாழ்வினை ஒளிர வைத்திடய்யா
நல்லூர்ப் பதிவாழ் நல்லைக்குமரா.

சி.மகாலட்சுமி
கொக்குவில்

## ஒன்றாய்ச்சேரக் கிடைத்திடும் அருள்

பக்தர்தரும் அடியார்களும் நாடியே
வணங்கிடும் கந்தனை
சித்தர்களும் யோசியர்களும் மனதில் இருத்தி
வழிபடும் கந்தனை
அருணகிரிநாதரும் ஔவைப்பிராட்டியும் உள்ளத்தே
போற்றிய கந்தனை
அறிஞரும், புலவரும், துதித்த கந்தனை
பூமாலை புனைவோரும், பாமாலை பாடுவோரும்
வழிபடும் கந்தனை
கூட்டுப்பிராத்தனையும் பஜனையும் பாடும் அடியார்
பின்தொடரும் கந்தனை
நல்லூர்த் திருவீதியில் தேலியார் இருவருடன்
உலாவரும் கந்தனை
அறிவும் உணர்வும் ஒன்றுசேர நாமும் வணங்கிடுவோம்
இரண்டும் ஒன்றாய்ச்சேர அவனருள் கிடைத்திடுமே

சண்முகலிங்கம் சஜீவன்
பன்னாலை தெல்லிப்பழை

## பாதணிகளுக்கோர் பணிவான விண்ணப்பம்

பாதணிகளே! நில்லுங்கள் கேளுங்கள்!
பரவசமாகும் நல்லூர்த் திருவிழாவில் நீங்கள்
சேவகம் செய்வதை நிறுத்துங்கள் சேவிக்கும்
புனித மண்ணுக்குக் களங்கம் செய்யாதீர்
சாதகமான பக்திச் சூழலை சஞ்சலமாக்காதீர்
சாலைகளிலுள்ள காப்பகங்களில் நில்லுங்கள்
சோதனைதீர நேர்த்திகளோடும் கும்பிடும்
மண்ணுக்குச் சோதனை செய்து குந்தகம்
விளைவிக்காது ஒதுங்கி நில்லுங்கள்.

ஈழத்தரசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உள்ளூர் உற்பத்தி, ஏற்றுமதி தெளிவுபடுத்தும் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஓக.5

யாழ்.மாவட்டச் சிறு நடுத்தர முயற்சியாளர்கள் தமது உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கான வழிவகைகளைத் தெளிவுபடுத்தும் செயலமர்வு அரியாலையில் அமைந்துள்ள தனியார் விருந்தகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

இலங்கை தேசிய ஏற்றுமதியாளர் சங்கமும் யாழ்.றோட்டரிக் கழகமும் இணைந்து இந்தச் செயலமர்வை முன்னெடுத்தன. செயலமர்வில் உள்ளூர் சிறு நடுத்தர முயற்சியாளர்களுக்கு தமது உற்பத்திகளை ஏற்றுமதி செய்யும் வகையிலான தரம் பேணுதல் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன. நிகழ்வில் வடக்கு ஆளுநர் நா. வேதநாயகன், யாழ்.மாவட்டச் செயலர் ம. பிரதீபன், இலங்கை தேசிய ஏற்றுமதியாளர் சபையின் தலைமை நிர்வாக அதிகாரி சிங்கம் மறிக்கர், இலங்கை மற்றும் மாலைதீவுக்கான றோட்டரிக் கழகத்தின் ஆளுநர் டெல்வின் பெரேரா, யாழ். முகாமைத்துவ சமாசத்துக்கான தலைவரும், சர்வதேச வர்த்தகம் குறித்த யாழ்ப்பாண முகாமைத்துவ மன்றத்தின் ஆலோசகருமான அனுராகவன், தேசிய தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி அதிகாரசபையின் உதவிப்பணிப்பாளர் ஷசிகா டி மெல் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25, 66)



சாவகச்சேரி நுணாவில் மேற்கு பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலய சப்பறத் திருவிழா கடந்த திங்கட் கிழமை சிறப்பாக இடம் பெற்றது. (ச-25, 9)



# பொலிஸ் நிலைய வருடாந்தப் பரிசோதனை

கிளிநொச்சி ஜெயபுரம் பொலிஸ் நிலையத்தின் வருடாந்தப் பரிசோதனை கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. கிளிநொச்சிப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் சிசிர பெத்திர தந்திரி பரிசோதனையை மேற்கொண்டார். (ச-25,113)

# 'ஐக்கிய தீபம்' பத்திரிகை வெளியீடு



யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையால் 'ஐக்கிய தீபம்' பத்திரிகை வெளியீட்டு நிகழ்வு அளவெட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. பத்திரிகையை யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபையின் தலைவர் ப.கேசவதாசன் வெளியிட்டுவைக்க, அதனை அளவெட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னைநாள் பொது முகாமையாளர் இ.இடபரூபன் பெற்றுக் கொண்டார். பின்னர் சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன. அளவெட்டிபலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் த.கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அளவெட்டி ப.நோ.கூ. சங்கத்தினர், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25,27)

# சாதனையாளர்கள் மதிப்பளிப்பு நிகழ்வு

முல்லைத்தீவு, ஓக.5

கேப்பாபிலவுக் கிராமத்தில் கற்றல் செயற்பாடுகளிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சாதித்த மாணவ, மாணவிகள், வழிப்படுத்திய ஆசிரியர்கள் மற்றும் கேப்பாபிலவுக் கிராமத்தில் சிறந்த முறையில் சேவையாற்றிய உத்தியோகத்தர்கள், கிராமமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரை மதிப்பளிக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. கேப்பாபிலவுக் கிராம பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் இடம்



பெற்ற நிகழ்வில், முதன்மை விருந்தினராக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து. ரவிகரன் பங்கேற்றார். (ச-25,246)

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 21.04.1933
மறைவு 07.07.2025

கடந்த 07.07.2025 (திங்கட்கிழமை)
அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி
அமரர் திருமதி கமலாலட்சுமி அருளானந்தம்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 06.08.2025 (புதன்கிழமை) முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

69, நல்லூர் குறுக்கு வீதி
நல்லூர்

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தரப்பை திருப்திப்படுத்த மஹிந்தவுக்கு அரசு நெருக்கடி

## திலும் அமுனுகம குற்றச்சாட்டு

**கொழும்பு, ஓக.5**

**பிரிவினைவாதக் கொள்கையுடைய புலம்பெயர் தமிழ் அமைப்புகளைத் திருப்திப்படுத்தவே மஹிந்த ராஜபக்சவை நெருக்கடிக்குள்ளாக அரசாங்கம் முயற்சிக்கின்றது என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் திலும் அமுனுகம குற்றஞ்சாட்டியுள்ளார். கொழும்பில் நேற்றுமுன்தினம் சர்வஜன சக்தி அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

மஹிந்த ராஜபக்சவை உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து வெளியேற்றினால் பெருமளவிலான மக்கள் உறுதிப்பத்திரத்துடன் அவருக்கு வீடுகளை வழங்குவார்கள். பழிவாங்கும் நோக்கில் சிறுபிள்ளைத்தனமாகச் செயற்படுவதை அரசாங்கம் தவிர்க்க வேண்டும். போரை முடிவுக்குக் கொண்டுவந்த மஹிந்த ராஜபக்சவை நெருக்கடிக்குள்ளாக இந்த அரசாங்கம் பல வழிகளில் முயற்சிக்கின்றது. முன்னாள் ஜனாதிபதிகளைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பல்ல, அது கடமை-என்றார். (எ-இ)

# ரணிலின் செயலாளர் சி.ஐ.டி.யில்

கொழும்பு, ஓக.5

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட செயலாளர் சாண்ட்ரா பெரேரா குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு நேற்று அழைக்கப்பட்டார்.

வாக்குமூலம் ஒன்றைப் பெறுவதற்காகவே அவர் குற்றப் புலனாய்வுத்திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# தேவையற்ற சலுகைகளை நீக்குவதில் தவறு இல்லை!

## மரிக்கார் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக.5

முன்னாள் ஜனாதிபதிகளின் தேவையற்ற வரப்பிரசாதங்களை இரத்துச் செய்வதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் அவர்களுக்கான பாதுகாப்புத் தொடர்ந்து வழங்கப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.


ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை இரத்துச் செய்வதற்காக அரசாங்கம் வர்த்தமானி ஒன்றை வெளியிட்டுள்ளது. மக்களின் வரிப்பணத்தில் நீண்டகாலமாக முன்னாள் ஜனாதிபதிகள் சுகபோகம் அனுபவிப்பது நியாயம் இல்லை. ஆனால் முன்னாள் ஜனாதிபதிகள் நாட்டுக்குச் செய்த சேவைக்காக அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் பாதுகாப்பு இல்லாமல் ஆக்கப்படக்கூடாது.

நியாயமான உரிமைகளை வழங்கி அநியாயமான விடயங்களை நீக்குவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. முதுமையில் இருக்கும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தங்களின் ஓய்வூதியத்திலேயே மருந்துப் பொருள்களை வாங்குகின்றனர். இவ்வாறான விடயங்களையும் ஆராய்ந்து சரியானமுறையில் இந்த நடவடிக்கையை முன்னெடுக்கவேண்டும் என்பது எனது தனிப்பட்ட நிலைப்பாடு என்றார். (எ-இ)





## கிளி. பொலிஸ் அத்தியட்சகராக

# பொறுப்பேற்றார் ஜெயசாந்த டீ சில்வா

கிளிநொச்சி, ஓக.5

கிளிநொச்சி பிராந்தியத்துக்குப் பொறுப்பான புதிய பொலிஸ் அத்தியட்சகராக சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயசாந்த டீ சில்வா நேற்றுத் திங்கட்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றார்.

கிளிநொச்சி பிராந்தியத்துக்குப் பொறுப்பாகக் கடமையாற்றிய சிசிர பெத்தர தந்திரி கொழும்பு தலைமையகத்துக்கு மாற்றப்பட்டதை அடுத்து, ஜெயசாந்த டீ சில்வா அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இதற்கு முன்பு கொழும்பு தெற்கு பிராந்தியத்துக்குப் பொறுப்பாகக் கடமையாற்றிருந்தார். (ஏ-25,113)


# விபத்தில் பெண் காயம்

கிளிநொச்சி, ஓக.5

புதுக்குடியிருப்பு ஏ35 வீதியில் நடந்த மோட்டார் சைக்கிள் விபத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

விபத்தில் காயமடைந்த பெண் தருமபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மற்றொரு மோட்டார் சைக்கிளில் பயணித்த ஆண் சிறுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.




இந்தச் சம்பவம் தொடர்பாக தர்மபுரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஏ-113)




## எப்பிடித்தான் மனம் வருகுதோ?

ஒருகுடம் பாலில ஒரு துளி விசத்தைக் கலந்தால், அந்தப் பால்முழுக்க விசமா மாறிடும். இந்த விசயம் எல்லாத்துக்கும் பொருந்தும் எண்டு சிலர் நம்புகினம். அதால இப்ப எல்லாத்திலையும் கூச்சநாச்சமில்லாமல் கலப்படம் செய்யினம். அதிலையும் எங்க ஊர்ச்சாமான் எண்டு நாங்கள் பெருமையாச் சொல்லுற பொருள்களில தான் உந்தக் கலப்படம் கூடுதலா நடக்குது எண்டதுதான் ஆகப்பெரும் வேதனை. நேற்றுப் பனம்பொருள்களைப் பற்றி பட்சி சொன்னதெல்லோ. அதை வாசிச்சுப் போட்டு சிலர் போன் பண்ணிக்கதைச்சவை. 'எல்லாம் சரிதான், பட்சி சொன்னமாதிரி பனங்கட்டி போட்டுக் கூழ் காய்ச்சி இருந்தால் எல்லாருக்கும் சலரோகம்தான் வரும்' எண்டும் அவை சொல்லிச்சினம். 'ஏன் பனங்கட்டி உடம்புக்குத் திறமான சாமான்தானே. சீனிதானே கூடாது? ' எண்டு கேக்க, அவை சொன்ன பதிலைக் கேட்டுத் தலையே கிறுகிறுத்துப் போட்டுது. 'இப்ப எங்க நல்ல பனங்கட்டி கிடைக்குது? எங்கையாவது ஒண்டிரண்டு பனைச் சங்கங்கள்தான் கருப்பணியில பனங்கட்டி செய்யினம். வீடுகளில எல்லாம் சீனியைப் போட்டுக் காய்ச்சித்தான் பனங்கட்டி எண்டு விக்கினம்' இது தான் அவையின்ர பதில்.

விசாரிச்சுப் பாக்கேக்க அவை சொல்லுறது உண்மையெண்டு தெரிஞ்சுது. சண்டைக்காலத்தில சீனித்தட்டுப்பாடு. அதால விலையும் உச்சம். அப்ப பனங்கட்டியை வைச்சுத்தான் சனம் சமாளிச்சது. ஏனெண்டால் அப்ப கருப்பணி தாராளமா கிடைச்சதால, பனங்கட்டியும் மலிவு. ஆனால் இப்ப அப்பிடியோ? ஒருகிலோ சீனியின்ர விலையைவிட ஒருகிலோ பனங்கட்டியின்ர விலை பத்துமடங்குகூட. அதோட கருப்பணி இறக்கிறதும் குறைவு. அதால சீனியைப் போட்டு காய்ச்சி அதை குட்டானில அடைச்சு பனங்கட்டி எண்டு கனபேர் ஏமாத்துகினம். சனங்களும் அது தெரியாமல், 'பனங்கட்டியால சுகர் வராது' எண்ட நினைப்பில வாங்கிப் பாவிச்சு, வருத்தக்காரரா மாறுகினம். பாலில ஒரு துளி விசம் கலந்த மாதிரி சீனியில ஒரு துளி கருப்பணி விட்டாலாவது பரவாயில்லை. ஆனால் மருந்துக்கும் விடுகினமில்லை.

பனங்கட்டி மாதிரி வருத்தக்காரர் சாப்பாட்டுக்கு பாவிக்கிற பொருள்களிலை கலப்படம் செய்ய எப்பிடித்தான் உவங்களுக்கு மனம் வருகுதோ தெரியேலை. ஒருத்தருக்கு சலரோகம் கூடிப்போட்டுது எண்டு தேத்தண்ணிக்குச் சீனி போடாமல் குடிக்கச் சொல்லி டாக்குத்தர் சொல்லியிருக்கிறார். ஆனால் அவரால இனிப்பில்லாத தேத்தண்ணியைக் குடிக்கமுடியேலை. அதால 'சீனிபோடாமல் பேரீச்சம் பழத்தோட தேத்தண்ணியைக் குடியுங்கோ, சீனியைவிட அது பரவாயில்லை' எண்டு டாக்குத்தர் இன்னொரு வழி சொல்லிக் குடுத்திருக்கிறார். அவரும் கொஞ்சநாள் பேரீச்சம்பழத்தோட தேத்தண்ணியைக் குடிச்சுப்போட்டு, சலரோகம் குறைஞ்சிருக்கும் எண்டு போய் செக் பண்ணிப் பார்த்தால், வருத்தம் முந்தினதைவிட இன்னும் கூடிப்போய் இருந்திருக்கு. என்னெண்டு ஆராய்ஞ்சு பார்த்தால், பேரீச்சம்பழத்துக்கு சீனிப்பாகு விட்டு, அதை 'உடன் பேரீச்சம்பழம்' மாதிரி காசைக்கூட்டி வித்திருக்கிறாங்கள் எண்டதும், இந்த வருத்தக்காரர் அது தெரியாமல் பாவிச்சதால சுகர் நல்லாக் கூடிட்டுது எண்டும் தெரியவந்திருக்குது. இப்பிடி மருந்தாப் பாவிக்கிறசாப்பாட்டுச்சாமன்களிலையும்கலப்படமெண்டால் கடைசியில எல்லாரும் வருத்தக்காரரா மாற வேண்டியதுதான் கண்டியளோ.


padsi@uthayan.com

- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேம்பிறிட்ஜ் பல்கலை விரிவுரையாளர் ஆசிரியர் கலாசாலையில் உரை

யாழ்ப்பாணம், ஓக.5 இங்கிலாந்தின் புகழ்பெற்ற பல்கலைக்கழகமான கேம்பிறிட்ஜ்பல்கலைக்கழக விரிவுரையாளரும், ஆராய்ச்சியாளருமான கலாநிதி.சிதம்பரநாதன் சபேசன் கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு வருகைதந்து கலாசாலைச் சமூகத்தினர் மத்தியில் ஊக்குவிப்பு உரை ஆற்றினார்.




"வாழ்க்கையில் வெற்றிபெறுவதற்காகக் கைக்கொள்ள வேண்டிய நான்கு விடயங்கள்" எனும் தொனிப்பொருளில் அவர் உரை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்றது. (ச-66)


## மணமகள்கள் தேவை

இந்து கௌரவ குடும்பம் 1994 - சுவிஸ் PR, 1973 லண்டன் PR மணமகன்களுக்கு மணமகள்கள் தேவை

தொடர்பு: 071 205 2313


## மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 10 . 1947

மறைவு 02 . 08 . 2025



### சுப்பிரமணியம்பிள்ளை தியாகரட்ணம்

யாழ்ப்பாணம் மானிப்பாயை பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம்பிள்ளை தியாகரட்ணம் அவர்கள் 02.08.2025 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்பிள்ளை-செல்லம்மாள் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - கமலாம்பாள் தம்பதியரின் அருமை மருமகனும், அன்னபூரணி அவர்களின் அன்புக் கணவரும், வனஜா, வாசுகி, ஸ்ரீதரன், வனிதா, ஜீவா, வசுமதி, ஸ்ரீகரன், ஸ்ரீவித்யா ஆகியோரின் அன்புத் தந்தையும், கஜேந்திரன், ரவிச்சந்திரன், மாலினி, சிவனேஸ், குமரநாதன், சாலினி, வினோஜன் ஆகியோரின் அருமை மாமனாரும், காயத்திரி, ரவிசாந், கம்சாயினி, ஷானுஜன், வைஷ்ணவி, அக்ஷயா, ஸ்ரீராம், கோகன், சிவானுஜா, கார்த்திகேயன், அதிசுரோகவன், அஹானா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.08.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கோம்பையன்மணல் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

859/7, வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம்.
077 0760 260

தகவல்:
குடும்பத்தினர்

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 18.07.2024 வியாழக்கிழமையன்று சிவபதமடைந்த
எமது அன்புத்தெய்வம்

### அமரர் மனோன்மணி யாதவராயர்

(வவுனியா இலங்கை திருச்சபை தமிழ்கலவன் பாடசாலை/ C.C.T.M.S, ஓய்வுநிலை ஆசிரியர்)

வவுனியாவைப் பிறப்பிடமாகவும், குடியிருப்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த மனோன்மணி யாதவராயர் அவர்களின முதலாம் ஆண்டு நினைவஞ்சலி.

அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும்
வழிநடத்திய எங்கள் அன்புத் தாயே
உங்கள் நினைவுகள் இப்போதும் எம்முள்
ஒளிமயமாக இருக்கின்றது
எங்கே காண்போம் உங்கள் மலர்ந்த முகத்தை
அன்பு நிறைந்த அம்மாவே அருங்குணங்கள் கொண்டவரே!
ஆண்டு ஒன்று அகன்றே போனதம்மா
அருகில் நீங்கள் இல்லாமல்.
ஏழேழு ஜென்மங்கள் எடுத்தாலும்
எமக்கு அன்னையாய் பிறந்திடவே
நாம் ஏங்குகிறோம் தாயே! எமது உயிர் உள்ளவரை எம்
நெஞ்சோடு இருக்கும் உங்கள் நினைவுகளுடன்..
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலியும், வீட்டுக்கிரியையும், மதிய போசன நிகழ்வும் நாளை (06.08.2025) புதன்கிழமை அன்று காலை 9:00 மணிமுதல் 1:00 மணிவரை ஆஸ்பத்திரி வீதி, குடியிருப்பு வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல: 10, வைத்தியசாலை சுற்றுவட்ட வீதி,
குடியிருப்பு, வவுனியா.
(CR/45713) J-1

பிள்ளைகளும், குடும்பத்தினரும்.

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்

மலர்வு 31 . 05 . 1951

உதிர்வு 04 . 08 . 2025



### தங்கராசா பொன்மணி

மாவிட்டபுரம் அரசடியைப் பிறப்பிடமாகவும், இல 57, சோடாக் கம்பனி லேன், மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா பொன்மணி அவர்கள் நேற்று (04.08.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா (பத்தர்) - மீனாட்சி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இரத்தினம் - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தங்கராசா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர், செல்லம்மா, ஆறுமுகம், அமுதலிங்கம், இராமச்சந்திரன், ஈஸ்வரன் ஆகியோரின் அன்புத் சகோதரியும், காலஞ்சென்ற கந்தசாமி, சின்னராசா, துரைராசா மற்றும் தவமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், ராஜ்குமார், காலஞ்சென்ற சுரேதா, டேவிற்குமார், சுரேஸ்குமார், விஜிதா, வனிதா, வினோதா ஆகியோரின் அன்பு தாயாரும், நிறைஞ்சினி, தேவகி, ஜெனனி, டுஸ்யந்தன், சங்கர், றஜீந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், யதுராஜ், அதீப், தனுப்பிரியா, பவித்திரா, இந்துஜன், பிருத்விகா, அபிநயா, ரிஷ்மிகா, லிஹீஸ், புவீசன், சகீசன், கபீசன், அஸ்வின், அபிஷேக் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2025) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல 57, சோடாக் கம்பனி லேன், மல்லாகம்.
077 632 0071 , 077 715 4202

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



உண்மை - நேர்மை - அஞ்சாமை

# வலிகளின்மீது அரசியல்!

இலங்கையில் இடம்பெற்ற இனப்படு கொலைகளைப் போன்று தற்போது தமிழகத்திலும் இனப்படுகொலை நடக்கின்றது. ஈழத்தில் தமிழர்கள்மீது குண்டுகளை வீசி இனப்படு கொலைகளைப் புரிந்தனர். தமிழகத்தில் மதுவை அருந்தவைத்து இனப்படுகொலை இடம்பெறுகின்றது என்றவாறாகத் தெரிவித்திருக்கின்றார் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான். ஈழத்தையும், தமிழீழ விடுதலைப் புலிகளையும், பிரபாகரனையும் முன்னிறுத்தி அரசியலைக் கட்டமைத்துள்ள சீமான், ஈழத்தமிழர்களின் போராட்டத்தையும் அவர்களின் கனவுகளையும் சுயலாப அரசியலுக்காகப் பயன்படுத்துகின்றார் என்ற விமர்சனங்கள் நீண்டகாலமாக முன்வைக்கப்பட்டுவருகின்றன. அந்த விமர்சனங்கள் எவ்வளவுதூரம் உண்மையானவை ஆழமானவை என்பதைத்தான், அவர் தற்போது வெளிப்படுத்தியிருக்கும் கூற்றும் கட்டியம் செய்திருக்கின்றது.

ஈழத்தில் இடம்பெற்ற போர் பௌத்த பேரினவாதச் சிந்தனைக்கும் விடுதலை வேட்கைக்கும் இடையிலான போர். கொடூரமான இனப்படு கொலைகளின் வலியை நெஞ்சில் தாங்கியவாறுதான் அந்தப் போர் முடிவுக்கு வந்தது. பச்சிளம் பாலகர்களைக்கூட விட்டுவைக்காத இழிசெயல் இடம்பெற்றதும் இங்கேதான். இப்படிப்பட்ட வேதனையின் ஊற்றை, மதுவைக் காசாக்கும் கூட்டத்துக்கும், மதுவைக் கரியாக்கும் கூட்டத்துக்கும் இடையிலான செயற்பாட்டுடன் ஒப்பிடுவது குறைந்தபட்ச அரசியல் அறிவும், மனித அறமும் அற்ற செயல். அத்துடன் இதை, ஈழத் தமிழர்கள் தமது விடுதலை வேட்கையில் கொண்டிருந்த பிணைப்பின் ஆழத்தையும் கொச்சப்படுத்தும் - நலினமான - விடயமாகவே பார்க்க வேண்டியுள்ளது. எனவே, தன்னுடைய கருத்துகளை சீமான் உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும்.

2026ஆம் ஆண்டு தமிழக சட்டப் பேரவைத் தேல்தல் இடம்பெறவுள்ளது. ஈழம் தொடர்பான கருத்துகளும் கச்சதீவு தொடர்பான கருத்துகளும் தமிழக அரசியலைத் தீர்மானிக்கும் விடயங்களாக மாறியுள்ளதால், இதுபோன்ற கூற்றுகள் எதிர்வரும் நாள்களில் மிகமிக அதிகளவு வெளிப்படலாம். அவ்வாறான கருத்துகளை ஈழத்திலும் -தமிழகத்திலும் - புலத்திலும் வாழும் தமிழ்த் தலைவர்களும், தமிழர்களும் நிபந்தனையற்றுக் கண்டிக்கவேண்டும். ஈழம் என்பது உயிரைத் துச்சமெனமதித்துக் களமாடிய ஒப்பற்ற மறவர்கள் வாழ்ந்தபூமி. அதன்கடந்தகால வரலாறு அரசியற் கேளிக்கைக்கு உரியதல்ல என்ற தெளிவை சீமான் பேர்வழிகள் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.


பதாகைகளும், ஒளிப்படங்களும், சிவப்பு மஞ்சள் கொடிகளும், புரட்சிக் கீதங்களும் ஒருபோதும் தமிழ்த் தேசிய அரசியலாக அமையாது என்பதற்கு சீமான் வெளிப்படுத்தியுள்ள சமீபத்திய கருத்து கனகச்சித உதாரணம். தமது போராட்டங்களும், கொள்கைகளும், வேட்கைகளும் முன்னிறுத்தப்படுவதை ஈழத்தமிழர்கள் ஒருபோதும் வெறுக்கவோ அல்லது எதிர்க்கவோ மாட்டார்கள். ஆனால், அதன் பின்னால் ஒளிந்திருக்கும் நிகழ்ச்சி நிரல்கள்தான் அருவருக்கத்தக்கவை. அத்தகைய விடயங்களை இந்தப் பூமி சட்டென உணர்ந்துகொள்ளும். ஏனெனில் இது வலிகளே வாழ்வான கதை!.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


நாளொரு நல்வார்த்தை

அதிகம் பேசாதவனை உலகம் அதிகம் விரும்புகிறது.
அளந்து பேசுபவனை அதிகம் மதிக்கின்றது.
அதிகம் செயற்படுபவனையே கைகூப்பித் தொழுகிறது.

– கன்பூசியஸ் –




# 23,000 மருத்துவர்களின் இடமாற்றலில் சிக்கல்!



**கொழும்பு, ஓக.5**

**23 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருத்துவர்களின் இடமாற்றங்களில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

சிரேஷ்ட மருத்துவர்களின் வருடாந்த இடமாற்றங்கள் தொடர்பாக பல சிக்கல்கள் எழுந்துள்ளன என்றும், அதனால் சுகாதார அமைப்பில் தேவையற்ற சிக்கல் உருவாக்கப்படுகின்றது என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
இடமாற்ற நடைமுறைகள் ஸ்தாபனக் குறியீட்டில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. ஆயினும் சுகாதார அமைச்சின் மருத்துவ சேவைகள் பிரிவின் தன்னிச்சையான தன்மை காரணமாகவே இந்தச் சிக்கல்கள் தற்போது எழுந்துள்ளன. இந்தப் பிரச்சினையால் சுமார் 23 ஆயிரம் மருத்துவர்களின் இடமாற்றங்கள் தொடர்பாகச் சிக்கல்கள் எழுந்துள்ளன. 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருத்துவர்களின் இடமாற்றங்கள் செயற்படுத்தப்படவில்லை -என்றார். (எ-இ)

## மைல் கல்லை தொட்டது பங்குச்சந்தை

கொழும்பு, ஓக.5
கொழும்பு பங்குச்சந்தையின் அனைத்து பங்கு விலைச் சுட்டெண் நேற்று வரலாற்றில் முதல்முறையாக 20 ஆயிரம் புள்ளிகளைத் தாண்டியுள்ளது.
கொழும்பு பங்குச் சந்தையின் கூற்றுப்படி, நேற்றுக் காலை வர்த்தகத்துக்காக கொழும்பு பங்குச் சந்தை திறக்கப்பட்ட 10 நிமிடங்களுக்குள் இந்த மைல்கல் எட்டப்பட்டது. அந்த நேரத்தில், பதிவுசெய்யப்பட்ட பரிவர்த்தனை வருவாய் 432 மில்லியன் ரூபாவைத் தாண்டியது என்று கொழும்பு பங்குச்சந்தை தெரிவித்துள்ளது. (எ-இ)

## நாணயமாற்று வீதம்

கொழும்பு, ஓக.5
இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று வீதத்தின் அடிப்படையில் அமெரிக்க டொலரின் விற்பனை விலை 305.0923 ரூபாவாகவும் கொள்வனவு விலை 297.4318 ரூபாவாகவும் காணப்பட்டது.
ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் விற்பனை விலை 406.5042 ரூபாவாகவும், கொள்வனவு விலை 393.6442 ரூபாவாகவும் காணப்பட்டது.
யூரோ ஒன்றின் விற்பனை விலை 354.5850 ரூபாவாகவும், கொள்வனவு விலை 342.6665 ரூபாவாகவும் காணப்பட்டது. (எஇ)

## சுற்றுலாவிகளால் 6 மாதங்களில் 3.7 பில். டொலர்

கொழும்பு, ஓக.5
கடந்த 6 மாதங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகைமூலம் 3.7 பில்லியன் டொலர் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது என்று வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். இந்த வருட இறுதிக்குள் மேலும் 3.7 பில்லியன் டொலர் வருமானத்தை ஈட்டமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)



# படகுக் கணக்கெடுப்பு நேற்றுமுதல் ஆரம்பம்

கொழும்பு, ஓக.5
தேசிய மீன்பிடிப் படகுக் கணக்கெடுப்பு நேற்று ஆரம்பமானது. இந்த நடவடிக்கையின் முதல் கட்டம் நேற்று பாணந்துறை மீன்பிடித் துறைமுகத்தில் ஆரம்பமான நிலையில், எதிர்வரும் 20 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியாகச் செயற்படுத்தப்படும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. மீன்பிடிப் படகுக் கணக்கெடுப்பு சுமார் 10 ஆண்டுகளுக்குப் பிறகு, நாடு முழுவதையும் உள்ளடக்கி நடத்தப்படுகின்றது. நாட்டின் கடற்கரையோரத்தில் இயங்கும் சுமார் 50 ஆயிரம் மீன்பிடிப் படகுகளில் புதுப்பிக்கப்பட்ட தரவுத்தளத்தை உருவாக்குவதே இந்தக் கணக்கெடுப்பின் பிரதான நோக்கம் என்று அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)

நாளை
புதன்கிழமை - ஆடி 21
06.08.2025
சுபநேரம் : 10.34 - 12.04
ராகுகாலம் : 03.04 - 04.34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்குவதற்குத் தயார்

## சுமந்திரன் அறிவிப்பு

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் வட மாகாண முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிட விரும்புவதாக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியற்குழுக் கூட்டம் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் யாழ்ப்பாணத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனது இந்த விருப்பத்தைக் கட்சிக்கு முறையாக அறிவிக்க உள்ளேன். எனினும், தனது வேட்பு மனுவை அங்கீகரிப்பதோ அல்லது நிராகரிப்பதோ கட்சியின் முடிவைப் பொறுத்தது.

தன்னைவிடப் பொருத்தமான ஒரு வேட்பாளரை முதலமைச்சர் பதவிக்கு கட்சி அடையாளம் கண்டால், கட்சியின் முடிவுக்குத் தான் முழுமையாகக் கட்டுப்படுவேன் - என்றார். (ச-27)




# சமஷ்டி அதிகாரப்பகிர்வு கோரி திருகோணமலையில் போராட்டம்

திருகோணமலை, ஓக.5

இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்துக்குள் மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வலியுறுத்தி திருகோணமலை வெருகல் பூநகர் பகுதியில் கடந்த சனிக்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதனை வடக்கு-கிழக்குப் ஒருங்கிணைப்புகுழு ஏற்பாடு செய்திருந்தது.

இதன்போது தொடர்ச்சியாக வடக்குகிழக்கு பகுதிகளில் அரசினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்ற நில ஆக்கிரமிப்புகள், மதச் சுதந்திர மீறல்கள், அரசியல் தீர்வான சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வு என்பன வலியுறுத்தப்பட்டன. (ச-50)

# கேள்விப் பத்திரம்
## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்
### பயன்படுத்திய மோட்டார் சைக்கிள்களின் விற்பனை
### IFB – 02

1. யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகமானது யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தினாலும், யாழ் மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களினாலும் பயன்படுத்தப்பட்ட கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களின் விற்பனையின் பொருட்டு ஆர்வமுடைய விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கிறது.

| S. No | Vehicle | Make / Class | Bid ID | Bid Security Amount Rs. |
|---|---|---|---|---|
| Motor Cycle | | | | |
| 1 | NP VO - 4103 | Motor Cycle | JDS/PROC/Veh.Au/08/01/2025 | 5,000.00 |
| 2 | NP MS- 6698 | Motor Cycle | JDS/PROC/Veh.Au/02/02/2025 | 5,000.00 |
| 3 | NP MT- 8525 | Motor Cycle | JDS/PROC/Veh.Au/02/03/2025 | 5,000.00 |
| 4 | NP MW - 3354 | Motor Cycle | JDS/PROC/Veh.Au/10/04/2025 | 5,000.00 |
| 5 | NP MS - 6695 | Motor Cycle | JDS/PROC/Veh.Au/10/05/2025 | 5,000.00 |
| 6 | NP VO – 4189 | Motor Cycle | JDS/PROC/Veh.Au/10/06/2025 | 5,000.00 |
| 7 | NP HT – 2655 | Motor Cycle | JDS/PROC/Veh.Au/10/07/2025 | 5,000.00 |
| 8 | NP HR-7383 | Motor Cycle | JDS/PROC/Veh.Au/12/08/2025 | 5,000.00 |
| 9 | NP UD-2370 | Motor Cycle | JDS/PROC/Veh.Au/12/09/2025 | 5,000.00 |

2. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் விதித்துரைக்கப்பட்டுள்ள விலைமனுக்கோரல் ஆவணம் ஒவ்வொன்றினையும் மீளளிக்கப்படாத வைப்பாகிய ரூ. 1,000/- ஐச் செலுத்தி "மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" அவர்களுக்கு எழுத்துமூலக் கோரிக்கையினை 05.08.2025 ம் திகதியிலிருந்து 19.08.2025 ம் திகதிக்கிடையில் அலுவலக நேரத்தில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரை சமர்ப்பிப்பதன் மூலமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.
3. விலைமனுதாரர்கள் மோட்டார் சைக்கிள்களை யாழ்ப்பாணம், நாவற்குழி, A9 வீதியில் அமைந்துள்ள மாவட்டச் செயலகத்தின் களஞ்சியசாலையில் 05.08.2025 இலிருந்து 19.08.2025 ம் திகதி வரை மு.ப.9.30 இலிருந்து பி.ப.3.00 வரை அலுவலக நாட்களில் பார்வையிட முடியும்.
4. ஒவ்வொரு விலைமனுதாரரும் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களிற்காக விலைமனுக்களைச் சமர்ப்பிக்க முடியும், ஆனால் வாகனம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியான விலைமனு ஆவணங்கள் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.
5. விலைமனுதாரர்கள் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டதற்கு ஏற்ப விலைமனுப்பிணை முறிப்பணமான மீளளிக்கப்படத்தக்க வைப்பினை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
6. விலைமனு முத்திரையிடப்பட்டு மூடிய தபாலுறையில் இடதுபக்க மேல் மூலையில் "பயன்படுத்திய மோட்டார் சைக்கிளை கொள்வனவு செய்வதற்கான விலைமனு - மோட்டார் சைக்கிள் இலக்கம் ஃ :............." என்ற விடயத்துடன் தலைவர், திணைக்களப் பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், A9 வீதி, யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட்டு 2025.08.20ம் திகதி மு.ப. 10.30க்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் அனுப்பப்படுதல் வேண்டும். குறித்த விலைமனுக்களின் முடிவுக் காலத்தின் பின்னர் உடனடியாகவே விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுதாரர்களோ அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளோ விலைமனுக்களைத் திறக்கும் சமயத்தில் பிரசன்னமாகி இருப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.
7. பெறுகைக்குழுவின் தலைவர் ஏதேனும் விலைமனுவினை ஏற்றுக்கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கும், விலைமனுக்கோரல் செயன்முறையை இரத்துச்செய்வதற்கும் மற்றும் விலைமனுதாரர்களுக்கு எந்தவொரு பொறுப்பையும் சுமத்தாமல் எந்தவொரு நேரத்திலும் சகல விலைமனுக்களையும் நிராகரிப்பதற்குமான உரித்தினைக் கொண்டிருப்பார்.

**தலைவர்**
**திணைக்களப் பெறுகைக்குழு**
**மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

# மருத்துவ முகாம்




யாழ்ப்பாணம், ஓக. 5

பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் வேலணைப் பிரதேச அரச உத்தியோகத்தர்களுக்கான இலவச மருத்துவ முகாம் பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. கண், இரத்த அழுத்தம், நீரிழிவு, தொற்றாநோய்கள் தொடர்பான பரிசோதனைகள் இதன்போது மேற்கொள்ளப்பட்டன. (ச-25,9)

# மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 09 . 1938



மறைவு 04 . 08 . 2025

## அழகரத்தினம் புவனேஸ்வரி

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் நெட்டிலைப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட அழகரத்தினம் புவனேஸ்வரி அவர்கள் நேற்று (04.08.2025) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சம்பந்தப்பிள்ளை-நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வர்களான கந்தையா-சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அழகரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, முத்துமாரி, நடராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், விக்கினேஸ்வரன், ரவிச்சந்திரன், இலக்கணகுமார், திருநாமக்கரசு ஆகியோரின் தாயாரும், கஜீவன், துவாரகா, டிலோஜன், டினுஜா, அஷ்வின், யுவிஷன், அபர்ணா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2025) செவ்வாய்க்கிழமை முற்கல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
**விக்கினேஸ்வரன் (மகன்)-077 608 7506**
**ரவிச்சந்திரன் (மகன்)**
**இலக்கணகுமார் (மகன்)-077 144 9260**
**திருநாமக்கரசு (மகன்)**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய

**மேடம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் சற்றுக் கவனம்செலுத்தவும். குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**இடபம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக் கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவுசெய்யநேரும். வெளியிடங்களுக்குச் செல்லும்போது உணவு, தண்ணீர் விஷயத்தில் அலட்சியம் காட்டவேண்டாம். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களைவாங்கும்யோகம் உண்டாகக்கூடும்.

**மிதுனம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியக்கூடும். தந்தையின்மூலம் ஆதாயம் கிடைக்கும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணையின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும். கணவன் மனைவிக் கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கன்னி:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக அமையும். குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று வழிபடுவீர்கள். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தாய்மாமன்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பணம் வந்தாலும் திடீர்ச் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**துலாம்:** வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். கொடுத்த கடன் திரும்பக் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது நல்லது. வெளியூர்ப்பயணங்களைத் தவிர்த்துவிடவும். பிற்பகலுக்குமேல் காரியங்களில்அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தந்தையின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள்.

**தனுசு:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக் கூடும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதாக இருந்தால் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது.

**மகரம்:** புதிய முயற்சிகளையும் பயணங்களையும் தவிர்க்கவும். சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப்பட்டாலும், உரிய சிகிச்சையினால் உடனே சரியாகிவிடும். உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமை அவசியம்.

**கும்பம்:** மகிழ்ச்சிதரும் நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் இருந்து நல்ல செய்தி கிடைக்கக்கூடும். அலுவலகத்தில் உங்கள் பணிகளில் கவனமாக இருக்கவும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாகமுடியும். உறவினர்கள்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும்.

# சோமரத்ன விவகாரத்தில் அரசின் தீர்மானம் என்ன?

## சரத் வீரசேகர கேள்வி



**கொழும்பு, ஓக.5**

**கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கின் பிரதான குற்றவாளியான சோமரத்ன ராஜபக்சவுக்கு உயர்நீதிமன்றம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது. ஆகையால் இந்த விவகாரத்தை ஜனாதிபதி ஆணைக்குழு நியமித்து விசாரணை செய்வது சிக்கல் நிலையை ஏற்படுத்தும். இதுதொடர்பில் ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கை என்னவென்பதை எதிர்பார்த்துள்ளோம் என்று முன்னாள் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மரண தண்டனைக் கைதியான சோமரத்ன ராஜபக்ச சர்வதேச விசாரணைக்குத் தயார் என்று அவரது மனைவி ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்பியுள்ளார். இலங்கையின் உள்ளக விவகாரத்தை சர்வதேசத்துக்குக் கொண்டுசெல்லும் ஒரு உத்தியாகவே இந்த விடயம் பயன்படுத்தப்படுகிறது. சர்வதேசக் கட்டமைப்புக்குச் செல்வதற்கு முன்னர் தேசிய நீதிக்கட்டமைப்பை நாடலாம். இராணுவத்தினர் குற்றம் புரிந்திருப்பார்களாயின் அவர்களுக்கு உள்ளக நீதிக்கட்டமைப்பின் கீழ் தண்டனை வழங்கவேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம். முறையான விசாரணைகளின் பிரகாரமே இவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறவுள்ளநிலையில் இவ்வாறான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. சோமரத்ன ராஜபக்சவின் மனைவி அனுப்பியுள்ள கடிதம் தொடர்பில் ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கைகள் என்னவென்பதை எதிர்பார்த்துள்ளோம்-என்றார். (எ-இ)

# தேசிய பாதுகாப்பில் குறைபாடு இல்லை

## அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு



கொழும்பு, ஓக.5

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக பாதுகாப்புசபை ஜனாதிபதி தலைமையில் ஒவ்வொரு வாரமும் தவறாமல்கூடி உரிய நடவடிக்கைகளை எடுத்துவருகிறது என்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பில் எவரும் அஞ்சத் தேவையில்லை என்றும் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பாதாள உலகக் குழுக்கள் இன்று, நேற்று தோன்றியவை அல்ல. அவை அரசியல்வாதிகளின் உதவியுடன் நீண்டகாலமாக இயங்குகின்றன. அதற்கு முற்றுப்புள்ளி வைக்கவே நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். அவை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ள போதிலும் முற்றாக முடிவுக்கு வரவில்லை. போதைபொருள் வியாபாரத்துடன் இணைந்ததாகவே பாதாளக் குழு செயற்பாடுகள் உள்ளன. தேசிய பாதுகாப்புத் தொடர்பில் நாம் வெளியே பேசிக்கொண்டு இருப்பதில்லை. எடுக்கவேண்டிய தருணத்தில் உரிய நடவடிக்கைகளை எடுத்துவருகிறோம்-என்றார். (எ-75)




# 76 சூட்டுச் சம்பவங்கள் இதுவரை 41 பேர் சாவு!

கொழும்பு, ஓக.5

இந்த ஆண்டில் கடந்த 3ஆம் திகதிவரையான காலப்பகுதியில் 76 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் 41பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும், 43 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாத்தறையில் நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்திலும், அம்பலாந்தோட்டை, பிங்கம பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்திலும் தலா ஒருவர் காயமடைந்துள்ளனர். (எ-இ)

# வடக்கில் இனவாதத்துக்கு முற்றுப்புள்ளிவேண்டும்!

## அமைச்சர் பிமல் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.5

நாம் ஆட்சிக்கு வந்து தெற்கில் இனவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளோம். அதேபோன்று வடக்கிலும் இனவாதம் முடிவுக்கு வரவேண்டும் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாம் தெற்கில் அரசியல் செய்ததுபோல் வடக்கில் செய்யவில்லை. 2010ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் நாம் வடக்கில் அரசியல் செய்யத் தொடங்கினோம். எம்மை அங்கு அரசியல் செய்வதற்கு மஹிந்த ராஜபக்ச அரசு அனுமதிக்கவில்லை. கடும் தொல்லை தந்தார்கள். எமது கட்சியின் உறுப்பினர்கள் லலித் ,குகன் கடத்தப்பட்டார்கள். வடக்கு மக்கள் [illegible] செய் [illegible] அரசியல் [illegible] வைத்து வடக்கு தமிழ்க் கட்சிகள் அந்த மக்களை ஏமாற்றி அரசியல் செய்துவந்தன. இப்போது அந்த மக்கள் இந்த ஏமாற்றத்தை உணர்ந்து எம்மோடு கைகோத்துள்ளனர். எமது நேர்மையான கொள்கையை அந்த மக்கள் ஏற்றுள்ளார்கள். வடக்கில் பெரும் அபிவிருத்திகளைச் செய்வதற்கு நிதி ஒதுக்கியுள்ளோம். அங்குள்ள அரசியற்கட்சிகள் இன்னும் இனவாதத்தைக் கையில் எடுத்துள்ளன. ஆனால், மக்கள் அதை நிராகரித்துக்கொண்டுவருகின்றனர். கறுப்பு ஜூலை போன்ற மோசமான சம்பவங்கள் எதுவும் இனி நடக்கக்கூடாது. எல்லோரும் இலங்கையர்கள் என்ற அடிப்படையில் ஒற்றுமையாக வாழவேண்டும். எல்லோரும் ஒன்றுசேர்ந்து இந்த நாட்டைக் கட்டியெழுப்பவேண்டும். இந்த நாடு எல்லா இன மக்களும் சொந்தமானது-என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய...

கள் நால்வர் இலங்கைக் கடற்படையால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நான்கு மீனவர்களும் மயிலிட்டியில் அமைந்துள்ள நீரியல் வளத்துறை அலுவலகத்துக்கு அழைத்து வரப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைக்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 185 இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-66-35)

## செம்மணிப்...

இதன்போதே மேலும் ஐந்து என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன்படி இதுவரை அடையாளம் காணப்பட்ட என்புத்தொகுதிகளின் எண்ணிக்கை 135ஆக அதிகரித்துள்ளது. நேற்று மேலும் 6 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ள நிலையில், இதுவரை மீட்கப்பட்ட என்புத்தொகுதிகளின் எண்ணிக்கை 126ஆக அதிகரித்துள்ளது. (அ-ம-26)

## அதிகாரங்களை...

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாகாணசபை முறைமை தொடர்பில் நாடாளுமன்றத்தில் பல தனிநபர் பிரேரணைகளை முன்வைத்துள்ளேன். மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான அவசியம் அரசாங்கத்துக்குக் காணப்படுகின்ற நிலையில் அரசாங்கம் பொறுப்பற்ற வகையில் செயற்படுவதை அவதானிக்கமுடிகிறது. 2013ஆம் ஆண்டுக்கு பின்னர் மாகாணசபைத் தேர்தலை நடத்தமுடியாத சூழலே காணப்படுகிறது. இதற்கு 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் தான் பொறுப்புச்சொல்லவேண்டும்.

வலது கையால் வழங்கிய அதிகாரத்தை இடது கையால் பறிக்கும் நிலைக்கு மாகாணசபை தள்ளப்பட்டுள்ளது. மாகாணங்களுக்கு உரித்தான அதிகாரங்களை ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தின் ஊடாக பறித்தெடுத்துள்ளார். சுகாதாரம், கல்வி மற்றும் நிர்வாக கட்டமைப்பில் இந்த நெருக்கடி நிலைமை காணப்படுகிறது. மாகாணங்களுக்குரிய விடயதானங்கள் பலவந்தமான முறையில் மத்திய அரசுக்கு மீளப்பெறப்பட்டுள்ளன.

அதிகாரங்களை முறையாகப் பகிராமல் மாகாணசபைகள் 'வெள்ளையானை' என்று சித்தரிக்கப்படுவது முறையற்றது. மாகாணங்களுக்கு அதிகாரங்களை வழங்காமல், கைவிலங்கிட்டு எதனையும் செய்யமுடியாது. இவ்வாறான செயற்பாடுகளால் மாகாணசபைகள் வினைத்திறனாகச் செயற்படாமல், வெள்ளையானை போன்றே காட்சியளிக்கும் - என்றார். (அ-ம-இ)

## சர்வதேச...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வு செப்ரெம்பர் மாதம் ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ளது. இதை முன்னிட்டு தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், மதகுருமார்கள், 115 சிவில், சமூக அமைப்பினர்கள் ஒன்றிணைந்து மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர். அந்தக் கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ட்ரக்குக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தின் உள்ளடக்கத்தின் படி:-

உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்து 16 ஆண்டுகள் கடந்துள்ளன. எனினும், இலங்கையில் உண்மையான பொறுப்புக்கூறல் இடம்பெறவில்லை என்பதை உணர்ந்து 60ஆவது கூட்டத் தொடரில் தீர்மானமொன்றை நிறைவேற்ற வேண்டுமெனக் குறித்த கடிதத்தின் மூலம் ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பரிந்துரைக்கும் செயன்முறையைத் தாமதமின்றி முன்னெடுக்கவேண்டும் என்பதை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் தமது அறிக்கையில் உள்ளடக்க வேண்டும் எனவும் அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

புதிய அரசாங்கத்தின் உள்ளகப் பொறிமுறை என்ற விடயத்தை முற்றாக எதிர்ப்பதாகவும் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. உள்நாட்டுப் பொறிமுறை என்ற அடிப்படையில் சுயாதீன அரச வழக்குத் தொடுநர் அலுவலகத்தை ஸ்தாபிக்கும் தீர்மானமானது எவ்விதத்திலும் பொருத்தமற்ற ஒன்றாகும் எனவும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வில் சர்வதேச கண்காணிப்பு, மேற்பார்வை, தொழில்நுட்ப உதவி என்பன அவசர தேவைகளாக அமைந்துள்ளன. இந்த உதவிகள் மனிதப் புதைகுழியிலிருந்து மீட்கப்படும் என்புத்தொகுதிகளை ஆதாரமாகக் கொண்டு சர்வதேச குற்றவியல் விசாரணையை மேற்கொள்ள உறுதுணையாக அமையும். இந்த விடயம் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் சிறப்பு அறிக்கையாளர் ஒருவரை நியமிப்பது பொருத்தமானதாக இருக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் இராணுவமயமாக்கல், சிங்கள பௌத்தமயமாக்கல், நில அபகரிப்பு, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்தல், நிகழ்நிலை காப்புச்சட்டம், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட குழுக்களை இலக்குவைத்துப் பாதுகாப்புப் பிரிவிடமிருந்து வெளிப்படும் அச்சுறுத்தல்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் தனது அறிக்கையில் பரிந்துரைகளை முன்வைக்க வேண்டுமெனவும் அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில், கண்ணியத்தையும், உத்தரவாதம் செய்யும் ஒரு எதிர்காலத்தையும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளரிடம் எதிர்பார்ப்பதாகவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ம-26-66)

## மனித...

முறையான அனுமதி இல்லாமல் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று பல்வேறு அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வை முன்னிட்டு, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்குத் தமிழ்த் தரப்புக்களால் கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்திலேயே யாழ்.ஊடக அமையத்தின் பெயர் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் பெயர்கள் அனுமதி இல்லாமல் பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

ஓர் அமைப்பாகச் செயற்பட்டு, பின்னர் இரண்டு, மூன்று அமைப்புகளாகப் பிளவடைந்த அமைப்புகளில், ஏதாவது ஒரு தரப்பினரிடம் அனுமதி பெற்றுவிட்டுப் பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

தமது பெயரை அனுமதியற்றுப் பயன்படுத்தியமை தொடர்பில், யாழ். ஊடக அமையத்தினர் அறிக்கையொன்றை வெளியிட்டுக் கண்டனம் தெரிவித்துள்ளனர். அந்த ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

யாழ். ஊடக அமையம் அரசியல் சார்பு எதுவும் இல்லாமல், தமிழ்த் தேசியம் சார்ந்த பரப்பில் ஊடக சுதந்திரத்துக்காகப் போராடி வருகின்றதொரு சுயாதீன அமைப்பாகும். 39 இற்கும் அதிகமான தனது ஊடக நண்பர்களை ஊடக சுதந்திரத்துக்கான தமிழ் தேசியப்போராட்டத்தில் அது அர்ப்பணித்துள்ளது.

சமரசமற்ற தனது நிலைப்பாட்டில் ஊடக சுதந்திரத்துக்காகவும் படுகொலையான தனது நண்பர்களுக்கான நீதி கோரிய பயணத்திலும் சமரசமேதுமற்றும் அது முன்னகர்ந்து வருகின்றது. இந்நிலையில் தத்தமது அரசியல் வயிறு வளர்ப்புக்காக சில கட்சிகள் யாழ். ஊடக அமையத்தின் பெயரை முறைகேடாக தமது அறிக்கைகளில் பயன்படுத்தியுள்ளமை தொடர்பில் பலரும் எமக்குச் சுட்டிக்காட்டி வருகின்றனர். இத்தகைய நடவடிக்கை கடும் அதிர்ச்சியையும் அறச்சீற்றத்தையும் எமக்குத் தந்துள்ளது.

யாழ். ஊடக அமையம் என்றுமே பத்தோடு பதினொன்றாக தனது பயணத்தை முன்னெடுக்காது என்பதை மீள வலியுறுத்துவதுடன் அரசியல் வயிறு வளர்ப்புக்கு சோரம் போகாதென்பதுடன் தனது கடுமையான கண்டனத்தையும் பதிவு செய்யவிரும்புகின்றது. முறையற்ற விதத்தில் தமது அரசியல் இருப்புக்காக எவரும் யாழ். ஊடக அமையத்தின் பெயரை முறைகேடாகப் பயன்படுத்த வேண்டாமென நாம் பகிரங்கமாகக் கோருகின்றோம் - என்றுள்ளது. (அ-ம-26)

## மஹிந்தவின்...

வித்ததாவது:-

மஹிந்தவுக்கு பாதுகாப்புக்குறைக்கப்பட்டுள்ளதாகப் பெரமுனவினர் கூறுகின்றனர். ஆனால், அவருக்குத் தற்போது வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புக்கூட மிகவும் அதிகம் என்றே நான் கூறுவேன்.

பயங்கரவாதத்தைத் தோற்கடிக்கத் தலைமைத்துவம் வழங்கினார் என்பதற்காக மஹிந்த மீது புலிகள் ஒருபோதும் தாக்குதல் நடத்தவில்லை. தாக்குதல் நடத்துவதற்கு முயற்சியும் எடுக்கவில்லை. புலிகளின் கொலைப்பட்டியலில் கூட மஹிந்தவின் பெயர் இருக்கவில்லை.

புலிகள் என்மீதே தாக்குதல் நடத்தினார்கள். போர் தொடங்கும் முன்பே என் மீது தாக்குதல் நடத்தினர். மஹிந்த வைத்திருந்த பாதுகாப்புப் பிரிவில் அரைவாசிப் பேர் மனைவி கடைக்குச் செல்லும்போது பாதுகாப்பு வழங்குவதற்கும், பிள்ளைகள் விளையாடுவதற்கு பாதுகாப்பு வழங்குவதற்குமே பயன்படுத்தப்பட்டனர். இது வெறும் பகட்டு. பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லாமல் எதற்கு மஹிந்தவுக்கு இத்தனை பாதுகாப்பு?.

நன்கு பயிற்சி வழங்கப்பட்ட 30 பேர் மஹிந்தவின் பாதுகாப்புக்குப் போதும். நான் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தால், 30 பேரைத்தான் பாதுகாப்புக்கு வழங்குவேன். சிங்கப்பூர் போன்ற நாடுகளில் அமைச்சர்களுக்கு பாதுகாப்பில்லை. அவர்கள் மக்களோடு மக்களாகத் திரிகிறார்கள். அப்படியொரு நிலைமை எமது நாட்டிலும் வரவேண்டும் - என்றார். (அ-ம-இ)

## காற்றாலை...

பெற்று வருகின்றன. இதற்கு பொதுமக்கள் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் தமது எதிர்ப்பைப் பதிவுசெய்துள்ளனர். அத்துடன், மாவட்ட, பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டங்களிலும் காற்றாலைகள் அமைப்பதற்கு எதிரான நிலைப்பாட்டைப் பதிவு செய்துவந்தனர்.

எனினும், பொதுமக்களின் எதிர்ப்பைப் புறக்கணித்து, காற்றாலை அமைப்பதற்கான பிரமாண்டமான சாதனங்கள் கனரக வாகனங்கள் மூலம் தற்போது மன்னாருக்குள் எடுத்துச்செல்லப்படுகின்றன. நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஒருதொகுதி உபகரணங்கள் எடுத்துச் செல்லப்பட்ட நிலையில், நேற்று திங்கட்கிழமையும் மேலதிக உபகரணங்கள் சில எடுத்துச்செல்லப்பட்டன. இதையடுத்தே, அரசியற் தலைவர்கள், அருட்தந்தையர்கள், சட்டத்தரணிகள், சிவில் செயற்பாட்டாளர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் இணைந்து, மேற்படி கனரக வாகனங்களை இடைமறித்து நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தைத் தொடர்ந்து, மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் தலைமையில் சட்டத்தரணி பா.டெனிஸ்வரன், மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்துநேசன் அடிகளார் ஆகியோர் சென்று மன்னார் மாவட்டச் செயலர் கா.கனகேஸ்வரனுடன் கலந்துரையாடியுள்ளனர்.

இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக நீதிமன்றத் தடையுத்தரவைப் பெறுவதற்கும் தற்போது முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-56-60)

## செம்மணியில்...

இருக்கின்றனவா என்று அறிவதற்காக தரையை ஊடுருவும் ராடர் அமைப்பின் மூலம் (ஜி.பி.ஆர்.) ஸ்கான் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதற்கான இயந்திரமும், தொழில்நுட்ப உதவிகளும் கொழும்பு ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் இருந்து பெறப்பட்ட நிலையில், அந்தப் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. இன்றும் இந்தப் பணிகள் தொடரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆய்வில் கண்டறியப்பட்ட விடயங்கள் தொடர்பில் விரைவில் அறிவிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# டிப்ளோமா பூர்த்தி சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், ஓக.5

சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையத்தினால் நடத்தப்பட்ட மனித உரிமைகள் டிப்ளோமாக் கற்கைநெறியைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு யாழில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மத்திய மாகாணசபையின் செயலாளர் சுபாஜினி மதியழகன், சிறப்பு விருந்தினராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி. கனகராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர். இதன்போது டிப்ளோமாக் கற்கைநெறியைப் பூர்த்திசெய்த 39 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. (ச-25,20)





மன்னார் நகரசபை மற்றும் பிரதேசசபையின் தவிசாளர்கள் மற்றும் உப தவிசாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா மன்னார் நகரக் கிளையின் தலைவர் அஷ்ஷெஹ் அசீம் தலைமையில் கடந்த சனிக்கிழமை மன்னார் ஆர். டி .எப். மண்டபத்தில் இடம்பெற்றது. (ச-41-56)

# பனைசார் கைப்பணி பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், ஓக. 5

பனை அபிவிருத்திசபையின் ஏற்பாட்டில் துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மல்லாவி கிராமஅலுவலர் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கான பனைசார் கைப்பணிப் பயிற்சிநெறியின் ஆரம்ப நிகழ்வு மல்லாவி பொதுநோக்கு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

உதவிப் பிரதேச செயலாளர் திருமதி ஸ்ரீ. நித்தியா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பனை அபிவிருத்திசபையின் விரிவாக்கல் முகாமையாளர் து. சுகன்ஜா மற்றும் பனை அபிவிருத்திசபையின் மாவட்ட முகாமையாளர் ஆர். சசிகுமார், போதனாசிரியர் திருமதி சு. சுபாசினி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ச-25,35)




# உலகவங்கி செயற்றிட்ட மதிப்பீடுகள் ஆராய்வு!

யாழ்ப்பாணம், ஓக.5

யாழ். மாவட்டத்தில் உலக வங்கியின் எண்ணக்கரு ரீதியாகத் தெரிவுசெய்யப்பட்ட செயற்றிட்டங்கள் தொடர்பாக பங்குதாரர்களுடனான கலந்துரையாடல் மாவட்டச் செயலர் ம.பிரதீபன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்டச் செயல கத்தில் நடைபெற்றது. இதன்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் உலக வங்கியினால் உட்கட்டுமாணம் மற்றும் சுற்றுலா அபிவிருத்தியுடன் தொடர்புபடும் வகையில் செயற்றிட்டங்கள் அடையாளப்படுத்தப்பட்டன. அதன்படி யாழ்ப்பாணக் கோட்டை மற்றும் பண்ணை கரையோரப் பூங்கா, பழைய கச்சேரியும் அதன் சூழலும், சிறுத்தீவு சுற்றுலா, குருநகர் மீன்பிடி படகுத்தளம் மற்றும் நெடுந்தீவு, குறிகட்டுவான், ஊர்காவற்றுறை, காரைநகர் படகுத்தளங்கள், யாழ். நகர வடிகால் அமைப்புச் செயற்றிட்டம், நகர கழிவுநீர் முகாமைத்துவச் செயற்றிட்டம், நெடுந்தீவு வீதி மற்றும் குடிநீர் விநியோக மேம்பாடு ஆகிய செயற்றிட்டங்கள் தொடர்பில் மதிப்பீடுகள் தயாரித்தல், சாத்திய நிலைமைகள், பங்குதாரர்கள் பங்களிப்பு போன்றவை தொடர்பாக ஆராயப்பட்டன. (ச-25,20,66)

## புலம்பெயர்...

கள் அரசாங்கத்தால் நீக்கப்படுகின்றன என்று பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலர் சாகர காரியவசம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகளை இரத்துச்செய்வதற்கு அரசாங்கம் தயாராகி வருகின்றது. இதற்குரிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. அரசியற் பழிவாங்கல் மற்றும் குரோத நோக்கு என்பவற்றின் அடிப்படையிலேயே முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய சலுகைகள் தற்போதைய அரசாங்கத்தால் இரத்துச்செய்யப்படவுள்ளன. புலம்பெயர் புலிகளின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில்தான் அரசாங்கம் செயற்படுகின்றது. அரசாங்கத்தின் இந்த முடிவால், எதிர்காலத்தில் போர் ஏற்பட்டால்கூட முதுகெலும்புடன் செயற்படக்கூடிய தலைவர் உருவாவதை தடுக்கும் நோக்கமும் இதன் பின்னணியில் உள்ளது - என்றார். (அ-ம-44)

**வீட்டில் கன்றின்வேலை**

சாவகச்சேரி நுணாவில் மத்தியில் கன்றின் வேலை தெரிந்த பெண்கள் தங்கியிருந்து வேலை செய்வதற்கு தேவை.
நல்ல சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு - 077 396 5382

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 20 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். 1 ஏக்கர் 15 இலட்சம்.

தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

(CS/59024) J-1

## நகைகள்..

ஒருவாரத்துக்கு முன்னர் நகைகள் திருடப்பட்டிருந்தன. இந்த விடயம் தொடர்பில் வவுனியா தலைமை பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவந்தன. இதன் தொடர்ச்சியாகவே நேற்று சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

வவுனியா - ஓமந்தை, புதியவேலர் சின்னக்குளம் பகுதியில் வைத்தே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார் என்றும், அவர் 33 வயதுடையவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவரிடம் இருந்து தாலிக்கொடி, சங்கிலி, காப்பு, மோதிரம் உள்ளிட்ட 25 பவுண் நகைகள் மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளின் பின் குறித்த நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-ம-110)

## செம்மணி...

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் மனிதக் கொலை விசாரணைப் பிரிவால் தாக்கல் செய்யப்பட்ட நகர்த்தல் பத்திரத்துக்கு அமைய, செம்மணிப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட புத்தகப்பை, சிறுவர்களின் காலணிகள், குழந்தையின் பாலூட்டும் போத்தல் (போச்சி), வளையல்கள் உள்ளிட்ட 54 சான்றுப்பொருள்களையும் பொதுமக்களின் பார்வைக்காக வைத்து, அடையாளப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நீதிமன்றம் அனுமதித்திருந்தது. இதன்படி, இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இந்தச் சான்றுப்பொருள்களை அரியாலை சித்துப்பாத்தி மயானத்தில் பார்வையிட முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதைமுன்னிட்டு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. (அ-ம-26)

## செம்மணிப்...

வினரே செம்மணி மனிதப் புதைகுழிக்குப் பயணம் மேற்கொண்டு அங்குள்ள களநிலைமைகளை அவதானித்தனர். அத்துடன் பணிகள் தொடர்பில் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான நிபுணர்கள் குழுவுடன் அவர்கள் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர். (அ-ம-26)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org